மாதம் இரு முறை வெளிவரும் இலவச இதழ், 18 மார்ச் 2007 - 31 மார்ச் 2007, குரல் 12

லண்டன் குரல்
Voice of London Tamils

## CPJ ஜனாதிபதி மிந்தவை கண்டித்து உள்ளது

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தன்னையும் தனது அமைச்சரவையையும் விமர்சிக்கும் ஊடகங்களை பழிவாங்குவதாக Committee to Protect Journalist அமைப்பு கண்டித்து உள்ளது. மார்ச் 1ல் சன்டே ஸ்ராண்டர்ட் மற்றும் அதன் சிங்கள மொழிப் பத்திரிகையான மௌபீம பத்திரிகைகளின் இயக்குநர் துஸ்யந்த பசநாயகே கைது செய்யப்பட்டதை அடுத்தே நியுயோர்க்கை தளமாகக் கொண்டு இயங்கும் இவ்வூடக அமைப்பு தன் கண்டனத்தை வெளியிட்டு உள்ளது.

இது தொடர்பாக இதன் ஆசிரியர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மஹிந்த ராஜபக்சவின் கீழுள்ள அமைச்சரவையின் மோசடிகள் பற்றி எழுதும் போது தான் ஒன்றுக்கு இரண்டு தடவை யோசிக்க வேண்டி உள்ளதாகக் குறிப்பிட்டு உள்ளார். பல தடவைகள் தாங்கள் கட்டுரைகளை இடை நிறுத்த வேண்டி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

Terrorist Investigation Division ஆல் கைது செய்யப்பட்ட பசநாயக்க அண்மையில் மீளக் கொண்டுவரப்பட்ட Prevention of terrorism Act கீழ் தடுத்து வைக்கப்பட்டு உள்ளார். இதே சட்டத்தின் கீழ் இதே பத்திரிகையின் தமிழ் நிருபர் பரமேஸ்வரி முனுசாமி கடந்த மூன்று மாதகாலமாக தடுத்து வைக்கப்பட்டு உள்ளார்.

இக்கைதுகள் அரசியல் காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுவதாக CPJ தலைமை நிர்வாக இயக்குநர் ஜோஎல் சைமன் தெரிவிக்கிறார்.

படுகொலைகளுக்கு எதிரான நினைவுக் கூட்டம் 02
ஈலிங் அம்மன் ஆலயத்தில் தொடரும் குழப்பம் 03
நிர்க்கதியில் தஞ்சம்கோரிய 83 இலங்கையர் 03
தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள் 04

# லண்டன் ஈரோஸ் மாநாட்டில் றோ வின் முன்னாள் இயக்குனர் அரசியல் சதுரங்கத்தில் றோ!!!

மார்ச் 24ல் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள ரட்ணசபாபதி ஞாபகார்த்த மாநாட்டில் இந்திய உளவுப்பிரிவான றோ RAW - Research & Analytical Wing இன் முன்னாள் தமிழக இயக்குநர் கலாநிதி எஸ் சந்திரசேகரன் "Concept of Security in the uni-polar world, and its regional implications in and around the Sub-continent" என்ற தலைப்பில் உரையாற்றுகிறார். கலாநிதி எஸ் சந்திரசேகரன் இப்போது South Asia Analysis Group இயக்குநராக உள்ளார். இவர் தமிழீழ விடுதலை இயக்கங்களின் சிரேஸ்ட உறப்பினர்களால் றோ சந்திரன் என அறியப்பட்டு இருந்தார்.


தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் பின் தளமாக இந்தியாவே இருந்தது. அவ்வேளையில் தமிழீழ விடுதலை இயக்கங்களை திரைமறைவில் இயக்கியது றோ என்பது எல்ரோரும் அறிந்த இரகசியம். இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகள், இயக்க மோதல்களின் பின்னணியில் றோவின் கை வண்ணம் குறிப்பாக அக்காலகட்டத்தில் பொறுப்பில் இருந்த றோ சந்திரனின் ஆளுமை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல முக்கிய நிகழ்வுகளுக்கு காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட முக்கிய பிளவுகளில் ஒன்றான மாத்தையாவின் பிளவும் அதனைத் தொடர்ந்து மாத்தையா றோ உடன் தொடர்புடையவர் என்று மரண தண்டனை விதிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இப்போது விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படும் ஈரோஸ் அமைப்பு இவ்வாறான ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்திருப்பது புலம்பெயர் தமிழ் அரசியல் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியல் வறுமையும் அவர்களது நடவடிக்கைகள் சர்வதேச அளவில் ஓரங்கட்டப்பட்டும் இருப்பதாலும் ஈரோஸ் அமைப்பு அவ்வெற்றிடத்தை நிரப்ப முயற்சிப்பதாக சிலர் அரசியல் ஊகங்களை வெளியிட்டு உள்ளனர். இன்னும் சில ஊகங்கள் விடுதலைப் புலிகளின் சமிஞையுடனேயே ஈரோஸ் இம்மாநாட்டை ஏற்பாடு செய்து றோ சந்திரனை வரவழைத்திருப்பதாக தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகள் இந்தியாவுடன் மீண்டும் உறவுகளை புதுப்பித்துக் கொள்ள றோ சந்திரன் பாலம் அமைப்பார் என்ற எண்ணப்பாடும் வெளியிடப்பட்டு உள்ளது.

ஓராண்டுக்கும் மேலாக லண்டன் ஈரோஸ் அமைப்பின் செயற்பாடுகள் வேகம் பெற்று இம்மாநாடு மற்றமொரு தளத்திற்கு அவர்களை தள்ளி உள்ளதை அவதானிக்க முடிகிறது. மட்டக்களப்பு உட்பட்ட கிழக்கு மாகாணத்தில் ஈரோஸ் அமைப்பினர் அம்மக்கள் மத்தியில் தமது அபிவிருத்தித் திட்ட நவடிக்கைகளை மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஈரோஸ் அமைப்பினரின் ஒன்றுகூடல் நிகழ்வொன்று சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் இவ்வமைப்பின் ஸ்தாபகர் இளையதம்பி ரட்ணசபாபதி காலமானதை அடுத்து அவரது அஞ்சலி நிகழ்வுகள் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது ரட்ணசபாபதியின் ஞாபகார்த்த மாநாடு ஈரோஸின் மற்றுமொரு அரசியல் மாநாடாக அமைய உள்ளது.

"Sri Lanka at Ethnic Crossroad" என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில் றோ சந்திரனுடன் பல கல்வியியலாளர்களும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து உள்ளனர்.

Date: Saturday, the 24th of March 2007,
Time: 10.00 – 16.30
Venue: Elvin Hall, The Institute of Education, University of London, 20 Bedford Way, London WC1H 0AL



FSA அங்கீகாரத்துடன் அபிமானம் பெற்ற வங்கிகளுடன் இணைந்து
தனிப்பட்ட மற்றும் வியாபார நோக்கங்களுக்கான
'காட்' மூலமான துரித பணமாற்றுச் சேவை
குறைந்த செலவு & குறைந்த சிரமம்
0% கொமிஷன், ஒரு தடவை ATM மூலமாக பணம் பெற்றுக் கொள்வதற்கான செலவு £2.25 மட்டுமே. உலகெங்கும் 1,000,000 ATM இயந்திரங்கள் மூலமாக வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் துரித சேவை.
உங்கள் 'காட்' மற்றும் pin இலக்கத்தைப் பெற்றுக் கொள்ள
தொடர்பு கொள்ளுங்கள் 0208 871 0485.
விநியோகஸ்தர்கள் UK முழுவதிலும் தேவை.
மேலதிக தகவல்களுக்கு 0207 871 0485.

**உங்களின் குரல்! லண்டன் குரல்!! லண்டனில் எங்கும் கிடைக்கும் !!!**
லண்டன் குரலை பெற்றுக் கொள்ளவும், நிறுவனங்களுக்கு இன்னும் அதிக பிரதிகள் வேண்டுமானாலும் தொடர்பு கொள்ள
**020 8279 0354**

18 மார்ச் 07 - 31 மார்ச் 07, குரல் 12

லண்டன் குரல்

## எட்டும் தூரமெங்கும் அவலம் எட்டாத தூரத்தில் சமாதானம்

இலங்கை அரசியலில் மக்கள் மீதான அனுதாபம் என்பது உதட்டளவிலேயே உள்ளது. தமிழர்கள் கொல்லப்படும் போதும் சிங்கள மக்கள் கொல்லப்படும் போதும் ஒவ்வொரு தரப்பும் அதனை தமது அரசியல் பிரச்சாரத்திற்கு பயன்படுத்துவதற்கு அப்பால் அது தொடர்பாக எந்த கரிசனையும் கொள்ளவில்லை. மாறாக அதிகாரத்தின் இருத்தலை கொலைகள் உறுதி செய்யத்தவறுவதில்லை.

சகோதரப் படுகொலைகள் என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பிறப்பியல் வியாதியாகவே இருந்து வந்துள்ளது. கொலைகளும் படுகொலைகளும் தமிழீழ விடுதலை இயக்கங்களின் ஒரு அங்கம். இரத்தக்கறை படியாத ஈழ விடுதலை இயக்கங்களே இல்லை. இயக்கங்களிடையேயும் இயக்கங்களின் உள்ளும் இடம்பெற்ற படுகொலைகள் தமிழீழ விடுதலைப் பாதையை முற்றிலுமாகத் திசை திருப்பி இருந்தது.

வரலாற்றுபடிப்பினைகளைக் கற்று அதன் பாதையை மாற்றி அமைக்காத போது அதே வரலாறு மீளவும் நிகழும் என்பது இயங்கியல் விதி. இது தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் நிரூபிக்கப்பட்டு உள்ளது. நாம் விடுதலைப் போராட்டத்தில் மூன்று தசாப்தங்களை கடந்து வரவில்லை இழந்து வந்திருக்கிறோம் என்பதே உண்மை.

இலங்கை அரசைப்பொறுத்தவரை தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே நடத்தி வருகிறது. தமிழ் மக்களுக்கு எதிரான கூட்டுப் படுகொலைகளும் பாலியல் பலாத்காரங்களும் திட்டமிட்ட வன்செயல்களும் அரசு தமிழின அழிப்பை திட்டமிட்டு மேற்கொள்வதையே உறுதிப்படுத்துகிறது. இது தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்க எவ்விதத்திலும் உதவாது

சம்பந்தப்பட்ட எல்லோரும் தங்கள் பாத்திரங்களை உணராதவரை எமது மக்களின் இழப்புகள் தவிர்க்க முடியாதது. தமிழ் மக்களுக்கு சமாதானம் மிகவும் எட்டாத தூரத்திலேயே இருக்கும்.

யார் கொலை செய்தார்? எதற்காக கொலை செய்யப்பட்டார் என்ற விசாரணைகளை ஒரு புறம் தள்ளிவிட்டு சகல கொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் கண்டிக்க முன்வருவோம்.

ஆசிரியர்: த ஜெயபாலன்
ஆசிரியர்குழு: Dr பி சிவக்குமார், ஆர் சுரேஸ்குமார், ஜோ ஜெயவேந்தன்
நிர்வாகம்: ரி கொன்ஸ்ரன்ரைன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 079 1944 4994


'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

**இலங்கையில் கடந்த 15 மாதங்களில் 4000 பேர் கொல்லப்பட்டு உள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவிக்கின்றது.**

# லண்டனில் படுகொலைகளுக்கு எதிரான நினைவுக் கூட்டம் கனடா, ஒன்ராரியோ முன்னாள் முதல்வர் போப் ரே கலந்துகொள்கிறார்

இலங்கையில் நடைபெறும் படுகொலைகளைக் கண்டிக்கும் வகையில் கடந்த ஆண்டு படுகொலை செய்யப்பட்ட கேதீஸ் லோகநாதனின் நினைவுக் கூட்டம் மார்ச் 31ல் நடைபெறவுள்ளது. முன்னாள் போராளியான கேதீஸ் லோகநாதன் ஒரு ஊடகவியலாளர், கல்வியியலாளர், சளைக்காத மனிதஉரிமைவாதியுமாவார். தமிழ் அரசியலில் ஜனநாயகத்தை திருப்பிக் கொண்டுவர முற்பட்ட கேதீஸ் பேச்சுவார்த்தையூடான ஜனநாயக அரசில் தீர்வே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரே தீர்வாக அமையும் என நம்பினார் என இக்கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள Sri Lanka Democrcy Forum தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் ஒன்ராரியோ முதல்வரும் கடந்த தேர்தலில் பிதமர் பதவிக்கு போட்டியிட்டவரும் மனித உரிமைவாதியுமான போப் ரே முக்கிய பேச்சாளராகக் கலந்துகொள்கிறார்.



படுகொலை செய்யப்பட்ட கேதீஸ் லோகநாதன்

இலங்கையின் சமாதானச் செயற்பாடுகளில் சமஸ்டி, அதிகாரப் பரவலாக்கம் ஆகியவை தொடர்பாக ஆலோசனை வழங்கி வரும் போப் ரே யுடன் புலம்பெயர்ந்த தமிழ் அரசியல் ஆர்வலர்களும் உரையாற்ற உள்ளனர்.

ஓகஸ்ட் 14, 2006ல் படுகொலை செய்யப்பட்ட கேதீஸின் நினைவாக நினைவு மலர் ஒன்றும் வெளியிடப்பட உள்ளது. படுகொலைகள், மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் அனைவரும் இதில் பங்கு பற்றி இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வர வேண்டும் என இந்நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிகழ்வு மார்ச் 31 அன்று மாலை 6:30 முதல் 9:30 வரை Conway Hall, 25 Red Lion Square, London WC1 ல் (Tube: Holborn) நடைபெறவுள்ளது.

## முஸ்லீம் பிரமுகரின் லண்டன் விஜயம்

தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொள்ள லண்டன் வந்திருந்த கலாபூஷணம் புன்னியாமீன் மார்ச் 16ல் லங்குறோப் ஹொட்டலில் எழுத்தாளர்களைச் சந்தித்து கருத்துப் பரிமாற்றம் ஒன்றை மேற்கொண்டார்.

அதற்கு மறுநாள் மார்ச் 17ல் Tamil Relief Centreல் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பில் புன்னியாமீன் 'வெளியீட்டு முயற்சிகளும் புலம்பெயர் நாடுகளில் தமிழும்' என்ற தலைப்பில் உரையாற்றினார். அப்போது புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழியை வாழவைப்பதற்கு இங்குள்ள பெற்றோரின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இன்னும் சிலரும் இச்சந்திப்பில் உரையாற்றினர்.

மார்ச் 18ல் வித்துவான் வேலன் இலக்கிய வட்டத்தினருடன் தமிழ் இலக்கியம் பற்றி புன்னியாமீன் கலந்துரையாடினார்.





## கார் விபத்தில் மரணம்

பெப்ரவரி 28ல், பாரிஸில் இருந்து லண்டன் வந்துகொண்டிருந்த போது ஏற்பட்ட கார் விபத்தில் தோழர் செந்தில் என்ற ரவீந்திரநாதன் செந்தில்ரவி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் பயணம் செய்த தோழர் செழியன் படுகாயமடைந்தார். செழியனின் ஒரு காலும் ஒரு கையும் செயலற்றுப் போய்விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்து உள்ளனர்.

வன்னியில் மல்லாவியைச் சேர்ந்த இவர்கள் பிரான்ஸில் வாழ்ந்தனர். சில வருடங்களுக்கு முன்னர் செந்தில் தனது மனைவி செல்வியுடனும் குழந்தையுடனும் லண்டனில் குடியேறினார். சில மாதங்களுக்கு ஒரு தடவை குடும்பமாக பிரான்சுக்குச் சென்று பாரிஸில் உள்ள செல்வியின் தாயாரைப் பார்த்து வருவார்கள்.

புரட்சிக் கொம்யூனிஸ்ட் கழகத்தினைச் சேர்ந்த இவர்கள் அரசியலில் மிகுந்த ஆர்வமுடையவர்கள்.



## லெபனானில் பயிற்சி பெற்றவர் தமிழகத்தில் உயிரிழந்தார்

மார்ச் 2ல் ராஜேஸ், உருத்திரன் என்றழைக்கப்பட்ட உருத்திரகுமார் தமிழகத்தில் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்தார். லெபனானில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் பயிற்சி பெற்ற இவர் 1986 வரை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உறுப்பினராக இருந்தவர். இவ்வமைப்பு சிதறுண்ட பின் பிற்காலங்களில் தமிழகத்தில் கிண்டியில் தொலைத்தொடர்பு மற்றும் வெளிநாட்டு முகவர் நிலையம் ஒன்றை இயக்கி வந்தார்.

வேலணை அல்லைப்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த இவர் இளமைப் பருவத்தில் சிறந்த விளையாட்டு வீரராகவும் பேச்சாளராகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

# வட கிழக்கில் வைத்தியர்களுக்குத் தட்டுப்பாடு

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அங்குள்ள வைத்தியசாலைகளில் பணிபுரிவதற்கு தமிழ் மொழி பேசக்கூடிய வைத்தியர்கள் தாமாகவே சுயவிருப்புடன் முன்வர வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மொழி பேசக்கூடிய வைத்தியர்களிடம் விசேட வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் நிலவும் வைத்தியர்கள் பற்றாக்குறைக்கு தீர்வுகாணும் முகமாக அரசாங்கம் அண்மையில் 800 வைத்தியர்களுக்கு புதிய நியமனங்களை வழங்கியுள்ளது. இந்நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்ற போது உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறும் போது நாடு முழுவதிலும் தேவையான வைத்தியர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்குக்கு தேவையான வைத்தியர்களும் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அப்பிரதேச மக்கள் தங்களுக்குத் தமிழ்மொழி பேசக்கூடிய வைத்தியர்களை நியமிக்குமாறு தொடர்ந்தும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். நாம் அவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளோம். வைத்தியர்களிடம் நாம் கேட்டுக் கொள்வதெல்லாம் எமது வடக்கு கிழக்கு மக்களின் குரலுக்குச் செவி சாய்த்து அவர்களுக்குச் சேவை செய்ய முன்வர வேண்டும் என்பதே. சுகாதாரத் துறையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைப்படும் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

௮௪ வீதமான அமெரிக்கர்கள் ஜோர்ஜ் புஸ், ஈராக்கில் பேரழிவு அணு ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி திட்டமிட்டே ஏமாற்றிவிட்டதாக உணர்கிறார்கள். ௪௬ வீதமான அமெரிக்கர்களே ஈராக் யுத்தம் வெல்லப்படக் கூடியது என நம்புகிறார்கள்.

# ஈலிங் கனகதுர்க்கை அம்மன் அறக்கட்டளை மீது செயரிற்றி கொமிசனுக்கு சந்தேகம்

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயச் செயற்பாடு மீது செயாரிற்றி கொமிசன் - Charity Commission சந்தேகம் வெளியிட்டு உள்ளது. எஸ் கருணலிங்கம் தலைமையிலான செயற்குழுவை கலைப்பதற்கு ஆலயத்தின் அறக்கட்டளையினருக்கு அந்த அதிகாரம் இருப்பது பற்றி தமக்கு தொடர்ந்தும் சந்தேகம் இருப்பதாக செயரிற்றி கொமிசன் தெரிவித்து உள்ளது. இது தொடர்பாக செயாரிற்றி கொமிசன் கனகதுர்க்கை அம்மன் ஆலய அறக்கட்டளைக்கு மார்ச் 13ல் எழுதியுள்ள கடிதத்தில் செயற்குழுவை கலைப்பதற்கான தகுந்த காரணங்கள் எதனையும் அறக்கட்டளையினர் வழங்க வில்லை என அம்மடலில் தெரிவித்து உள்ளது.



லண்டனில் உள்ள கூடிய வருமானம் உடைய ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம் தாயகத்தில் பல்வேறு நலவாழ்வுத் திட்டங்களை மேற்கொண்டு வந்தது. மாணவர்களுக்கு இலவச கணணி வகுப்புக்களை தமிழ் மாவட்டங்களில் எல்லாம் ஏற்படுத்திக் கொடுத்தது. தொழில்பயிற்சி நிலையங்கள் ஆலயத்தின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. பல சிறுவர் இல்லங்களையும் ஈலிங் ஆலயம் பராமரித்து வந்தது. மேலும் ஆலய மண்டபம் கலை, இலக்கிய நிகழ்வுகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு லண்டன் தமிழர்களுக்கும் ஆலயம் தனது கரங்களை நீட்டியது.

தேவசகாயத்தின் தலைமையிலான ஆலய அறக்கட்டளையினருக்கும் கருண லிங்கத்தின் (படம்) தலைமையிலான செயற்குழுவுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு தேவசகாயம் தலைமையிலான அறக்கட்டளை அடியார்களால் தெரிவு செய்யப்பட்ட கருணலிங்கம் தலைமையிலான செயற்குழுவை கலைத்தது. அதனைத் தொடர்ந்து நீதிமன்றம், மத்தியஸ்தம் என ஆலய நிர்வாகம் இழுபறிப்பட்டது. இந்நிலையில் தேவசகாயம் தலைமையிலான அறக்கட்டளை, தாயகத்தில் ஆலயத்தின் ஆதரவில் இயங்கிய சில கணணிப் பயிற்சி நிலையங்கள், தொழில் பயிற்சி நிலையங்கள், சிறுவர் இல்லங்களுக்கான நிதியை நிறுத்தினர். அதிகார இழுபறியில் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாரி வழங்கிய நிதி ஆலயத்தின் வங்கிக் கணக்கில் முடங்கிக் கிடந்தது. ஆலயத்தின் ஆதரவில் பராமரிக்கப்பட்ட சிறுவர்கள் கைவிடப்பட்டனர்.

இப்போது அறக்கட்டளை நடந்து கொண்ட விதம் சந்தேகத்திற்கு இடமாக உள்ளதாக செயரிற்றி கொமிசன் அறிவித்து உள்ளது. மேலும் ஏப்ரலில் Anual General Meeting - AGMயை கூட்டி செயற்குழுவிற்கான விண்ணப்பங்களைக் கோருமாறு செயரிற்றி கொமிஸன் அறக்கட்டளையினருக்கு அறிவுறுத்தி உள்ளது. மேலும் ஆலய உறுப்பினர்களின் உறுப்புரிமை இன்னமும் பிரச்சினையாக உள்ளதை சுட்டிக்காட்டியுள்ள செயரிற்றி கொமிசன் சம்மந்தப்பட்ட சகல தரப்பினரும் இதில் ஈடுபட்டு சுமூகமாக அதனை Electoral Reform Srevices இன் உதவியுடன் தீர்க்க வேண்டும் என்று கேட்டுள்ளது.

இக்கடிதத்துடன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய இழுபறி தீர்ந்துவிடும் என்று சம்பந்தப்பட்ட யாரும் நம்பவில்லை. இதில் சட்டத்தரணிகள், சட்ட ஆலோசனை, நீதிமன்றம் என்று பல்லாயிரம் பவுண்கள் ஏற்கனவே விரயமாகி உள்ளது. இந்த இழுபறியின் தொடர்ச்சி சட்டத்தரணிகளின் வங்கிக் கணக்குகளை நிரப்புமே அன்றி கைவிடப்பட்ட குழந்தைகளின் வயிற்றை நிரப்பாது என அம்பாள் அடியவர் கனகசுந்தரம் சலித்துக் கொண்டார்.

## இலங்கையில் சமாதானம் பிரித்தானிய பா உ கள் சந்திப்பு

இலங்கையில் சமாதானத்தை முன்னெடுப்பதற்கான வழியும் மீளபரிசீலினையும் - The way forward to peace and reconciliation in Sri lanka என்ற தலைப்பிலான கருத்தரங்கு பிரித்தானிய பாராளுமன்ற அறையில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மார்ச் 19ல் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு இலங்கைக்கான சர்வகட்சிக்குழுவின் இணைத் தலைவர் Lord Naseby தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

Campaign for Peace & Unity in Sri lanka - CPUSL என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இக்கருத்தரங்கில் MP Mr Andrew Love, MP, Mr Geoffrey Van Orden, MEP, Mr Andrew Pelling, MP, Mr Barry Gardiner, MP, Mr Colin Breed, MP, Mr John Austin, MP, Mr Douglas Wickremaratne, Mr V Anandasangaree and Mr N U M Ameen ஆகியோர் கலந்து கொள்ளவார்கள் என CPUSL தெரிவித்துள்ளது.


## பிரான்ஸில் தஞ்சம் கோரியவர் யாழில் கொல்லப்பட்டார்.

பிரான்ஸில் தஞ்சக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டு தாயகம் சென்றவர் பெப்ரவரி 28ல் சுட்டுக்கொல்லப்பட்டார். 2002 மேல் பிரான்சில் அரசியல் தஞ்சம் கோரிய ராஜேந்திரம் இளஞ்செல்வன் (30) என்பவரே யாழில் சுட்டுக்கொல்லப்பட்டு உள்ளார். இவரது கொலை பற்றி யாழ் மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செ கஜேந்திரன் இலங்கையிலுள்ள பிரெஞ் தூதரகத்திற்கு கடித மூலம் அறிவித்துள்ளார்.

நுணாவில், சாவகச்சேரியைச் சேர்ந்த இளஞ்செல்வன் சம்பவதினம் காலை 5:30 மணியளவில் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இளம் குடும்பஸ்தரான இவர் நான்கு மாதக் குழந்தைக்கு தந்தையாவார்.

## பல்கலைக்கழக மாணவர் சங்க உயர் பதவியில் இலங்கையர்

பிரித்தானிய பல்கலைக்கழக தர வரிசை யில் 3வது இடத்தில் நிற்கும் London School of Economics இன் மாணவர் சங்கச் செயலாளராக இலங்கை முஸ்லீம் மாணவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு உள்ளார். பாகில் பாக்கீர் மார்கார் என்ற இம்மாணவரே இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு உள்ளார். இவர் இலங்கையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருடைய மகன் என்பது குறிப்பிடத்தக்கது.



மாணவர் பாகில் பாக்கீர் மார்கார்

மாணவர் ஒருவர் மாணவர் சங்கத்தில் வகிக்கக் கூடிய அதிஉயர் பதவி இதுவாகும். இப்பதவிக்கு தெற்காசியா மாணவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டது இதுவே முதற்தடவை எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது. பெப்ரவரி 28ல் இடம்பெற்ற வாக்கெடுப்பில் 263 வாக்குகள் அதிகம் பெற்று பாகில் மாணவர் சங்க செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தஞ்சம் கோரிய 83 இலங்கையர்களின் நிலை இழுபறியில்

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் தஞ்சம் கோரிய 83 இலங்கையர்களின் நிலை தொடர்ந்தும் இழுபறியில் உள்ளது. சர்வதேச கடற் பரப்பில், இரு இந்தோனேசியர்களுடனும் 83 இலங்கையர்களுடனும் காணப்பட்ட மீன் பிடி வள்ளத்தை அவுஸ்திரேலிய கடற்படையினர் இடை மறித்து கிறிஸ்மஸ் தீவுக்கு இட்டுச் சென்றனர்.

தற்போது அவர்களை இந்தோனேசியா ஏற்று அவர்களது தஞ்ச விண்ணப்பங்களை யுஎன்எச்சிஆர் ஊடாக பரிசீலிக்க வேண்டும் என அவுஸ்திரேலிய அரசு வேண்டுகோள் விடுத்து உள்ளது. ஆனால் தங்கள் அவர்களை ஏற்கும் பட்சத்தில் உடனடியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்புவோம் என இந்தோனேசிய வெளிநாட்டு அமைச்சகம் அறவித்து உள்ளது.

இந்தோனேசியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் தஞ்சம்கோரிய ஆண்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்ற உறுதியைப் பெறுவதற்கு அவுஸ்திரேலியா தான் தொடர்ந்தும் இந்தோனேசிய அரசுடன் பேசிக்கொண்டு உள்ளதாகத் தெரிவித்து உள்ளது.

ஆனால் தாங்கள் 1951ம் ஆண்டு ஜெனிவா உடன்படிக்கையில் கையெழுத் திடவில்லை என்று தெரிவித்துள்ள இந்தோனேசியா அவ்வுடன்படிக்கைக்கு தாம் கட்டுப்படமாட்டோம் என்றும் அவுஸ்திரேலியா அவ்வாறான ஒரு விம்பத்தை கொண்டுருக்க முடியாது என்றும் அறிவித்துள்ளது. மேலும் இந்தோனேசியா அரசியல் தஞ்சம் வழங்கும் வழமையை கொண்டிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த இழுபறி நிலையில் தஞ்சம் கோரியவர்களின் தஞ்சக் கோரிக்கை அடிப்படையற்றது என்றும் தஞ்சம் கோரிய ஆண்கள் பொருளாதார நோக்கங்களுடையவர்கள் என்றும் அவர்களை திருப்பி அனுப்புமாறும் இலங்கை அரசு கோரியுள்ளது.

அவுஸ்திரேலியா அரசியல் தஞ்சம் தொடர்பாக நீண்டகாலமாகவே கடுமையான போக்கை கடைப்பிடித்து வருகிறது.

௧000 ஊடகவியலாளர்களும் துணை அலுவலர்களும் ஜனவரி ௧996 முதல் யூன் ௨006க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கொல்லப்பட்டு உள்ளனர். இவர்களில் ௧38 பேர் உலகின் ஆபத்தான நாடான ஈராக்கில் கொல்லப்பட்டு உள்ளனர். ஆனால் 70 ஊடகவியலாளர்களும் துணை அலுவலர்களுமே வியட்நாம் போரில் கொல்லப்பட்டனர்.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

முஸ்லீம்களின் தேசம்: இந்தோனேசியா - 26 மில்லியன் (88வீதம்), பாகிஸ்தான் - 161 மில்லியன் (97 வீதம்), இந்தியா - 147 மில்லியன் (13.4 வீதம்), பங்களாதேஸ் - 122 மில்லியன் (83 வீதம்), எகிப்து - 71 மில்லியன் (90 வீதம்), துருக்கி - 70.2 மில்லியன் (99.8 வீதம்), ஈரான் - 67 மில்லியன் (98 வீதம்)

### தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள் நிகழ்வின் ஒரு பார்வை:

# இலங்கை முஸ்லீம்களை தனித்துவமான இனமாக அங்கிகரிப்பதில் சூடான விவாதம்

லண்டன், வோல்தம்ஸ்ரோவில் மார்ச் 10ல் இடம்பெற்ற தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள் தொடர்பான கலந்துரையாடலில் இலங்கை முஸ்லீம் களை தனித்துவமான ஒரு இனமாக அங்கிகரிப்பதில் சூடான விவாதம் இடம்பெற்றது. வெவ்வேறு அரசியல் பின்னணிகளில் இருந்தும் தமிழ், முஸ்லீம் மக்கள் கலந்து கொண்டனர். பதிப்பாளர், எழுத்தாளர், ஊடகவியலாளர் புன்னியாமீன் இலங்கையில் இருந்து வந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். ரி கொன்ஸ்ரன்ரைன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு நவஜோதியின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது. சிறுப்புரை வழங்கிய புன்னியாமீன் இலங்கையில் தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள் வளர்க்கப்படுவதன் அவசியத்தையும் அவசரத்தையும் எடுத்து விளக்கினார். தமிழ் - முஸ்லீம் அரசியல் அமைப்புகள் தங்கள் சுய அரசியல் லாபங்களுக்காகவே செயற்படுகின்றன என்று குற்றம்சாட்டிய புன்னியாமீன் தமிழ் - முஸ்லீம் மக்கள் ஒருவரை ஒருவர் பயங்கரவாதிகளாகப் பார்ப்பதைத் தவிர்த்து இருவரும் தங்கள் பிள்ளைகளுக்கு




நட்புறவை ஊட்டி இனஉறவுகளை தமது வீட்டில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தேசம் சஞ்சிகைகளில் வெளி யான முஸ்லீம்கள் சம்பந்தப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப் பட்ட 'தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள்' என்ற தேசம் சிறப்பு மலரை ரி சோதிலிங்கம் ஆய்வு செய்தார். நூலை கவுன்சிலர் போல் சத்தியநேசன் வெளியிட்டு வைத்தார்.

'வரலாற்று ரீதியாக முஸ்லீம் மக்களின் இருப்பு' என்ற தலைப்பில் மூன்றாவது மனிதன் ஆசிரியர் பௌசர் உரையாற்றினார். அவர் முஸ்லீம்களின் வரலாற்றுப் பின்னணியையும் தமிழ் மொழியை மதிக்கும் அதேசமயம் முஸ்லீம்களின் தனித்துவத்தையும் எடுத்துக் கூறினார். சிறிலங்கா முஸ்லீம் போறம் அமைப்பின் தலைவர் நஜா மொகமது 'முஸ்லீம் தேசியவாதமும் முஸ்லீம் மக்களும்' என்ற தலைப்பில் பேசும் போது முஸ்லீம்கள் தனித்துவமான மத அடையாளத்தைக் கொண்ட தனி இனம் என்று குறிப்பிட்டார். தமிழ் மக்கள் இன்ன இன்ன அடையாளங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று முஸ்லீம் மக்கள் எப்படிச் சொல்ல முடியாதோ அதேபோல் முஸ்லிம் மக்கள் இன்ன இன்ன அடையாளங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று யாரும் சொல்ல முடியாது என்று அவர் தெரிவித்தார். தமிழ் - முஸ்லீம் முரண்பாடுகள் அரசியல் அடிப்படையில் அணுகப்பட வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

'தமிழ் தேசியவாதமும் தமிழ் மக்களும்' என்ற தலைப்பில் உரையாற்றிய சட்டவல்லுனர் சி ராஜேஸ்குமார் தமிழ் தேசியவாதத்தின் ஆபத்தான போக்கினைச் சுட்டிக்காட்டினார். மேலும் தமிழ் தேசியவாதம் தன்னுள் உள்ள சாதிய பிரிவுகளை எவ்வாறு அடக்குகிறது என்பதை அவர் விளக்கினார். 'தமிழ் - முஸ்லீம் உறவுக்கான தடைகளும் அதை நீக்குவதற்கான வழிவகைகளும்'




என்ற தலைப்பில் பதூர் சமன் தனது சொந்த அனுபவங்களுக் கூடாக பேசினார். எஸ் எஸ் எம் பாருக் முஸ்லீம் ஊடகங்களை அறிமுகம் செய்து வைத்ததுடன் இனஉறவுகளை வளர்ப்பதில் ஊடகங்களின் பங்களிப்பைச் சுட்டிக்காட்டினார். பெரும்பாலும் தமிழ் தேசிய ஊடகங்கள் முஸ்லீம் விரோதப் போக்கைக் கொண்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர் முஸ்லீம்களுக்கு எதிராக அநீதிகள் இழைக்கப்பட்டபோது தமிழ் தேசிய ஊடகங்கள் அதற்கெதிராக குரல் எழுப்பவில்லை என்றும் அவை மௌனமாக இருந்ததையும் சுட்டிக்காட்டினார். ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் முஸ்லீம்களைப் பயங்கரவாதிகளாக காட்டத் தவறியதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

'சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப் பட்ட தீர்வுத் திட்டங்கள்' என்பதை ஆய்வு செய்த ஆய்வாளர் வி சிவலிங்கம்



அதிகாரத்தை பகிர்ந்துகொள்வது, அதிகாரத்தை பரவலாக்குவது பற்றி விளக்கமளித்தார். மேலும் தற்போது சர்வகட்சிக்குழுவின் பெரும்பான்மை நிபுணர்கள் குழுவாலும் விதாரனவினாலும் முன்வைக்கப்பட்டு உள்ள தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு சமாதானத் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

'இலங்கை இனஉறவுகளின் எதிர் காலம்' என்ற தலைப்பில் கல்வியியலாளர் ஈரோஸ் ரவி சுந்தரலிங்கம் பேசும் போது இலங்கையில் தமிழ், சிங்களம் ஆகிய இரு இனங்களே இருப்பதாகவும் இனங்கள் மதத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட முடியாது என்றும் தெரிவித்தார். பாகிஸ்தானை தோல்வி அடைந்த தேசமாக அவர் உதாரணம் காட்டினார். ஒரு இனத்தின் அடிப்படை மொழி என்பதை முற்றிலும் முரண்பட்ட மார்க்சிய, முதலாளித்துவ தத்துவங்கள் குறிப்பிடுவதை அவர் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் தமிழ் தேசம் என்பது இருக்கவில்லை என்றும் அது சகல தமிழ்பேசும் மக்களையும் கொண்டு கட்டி எழுப்பப்பட வேண்டும் என்று ஈரோஸ் அமைப்பே முதன் முதலில் தெரிவித்ததாகவும் அதில் வாழ்பவர்கள் ஈழவர்கள் என்றும் அவர் கூறினார்.

'இனப்பிரச்சினைக்கான தீர்வும் முஸ்லீம்களின் நிலைப்பாடும்' என்ற தலைப்பில் பேசிய சட்டவல்லுனர் எஸ் எம் எம் பசீர் தமிழ் - முஸ்லீம் இரு வேறுபட்ட இனங்கள் என்பதை ஏற்றுக் கொண்டே வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும் என்று குறிப்பிட்டார். தந்தை செல்வநாயகம் தமிழ் தலைவர்களில் இருந்து மிகவும் வேறுபட்டவர் அவர் அந்நாட்களிலேயே முஸ்லீம்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டவர் அவரை இப்போதுள்ள தமிழ் அரசியல் தலைவர்களுடன் ஒப்பிட முடியாது என்று பசீர் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார். கூட்டத்தின் முடிவில் தொகுப்புரை வழங்கிய கலாநிதி எம் வை எம் சித்திக் முஸ்லீம்கள் தனியான ஓர் இனம் என்றும் தமிழ் - முஸ்லீம் இனங்களுக்கிடையே முதலில் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும் என்றும் அதனைத் தொடர்தே இனஉறவுகள் வளர்த்தெடுக்கப்பட முடியும் என்றும் தெரிவித்தார்.

நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு குறித்த நேரத்தில் (10 நிமிடங்கள் தாமதமாக) ஆரம்பித்தது.

ஆயினும் கூட்டம் மேலும் ஒன்றரை மணிநேரம் நீடிக்கப்பட்டு கலந்துரையாடல் இடம்பெற்றது. முஸ்லீம்கள் தனியான ஒரு இனம் என்பதை மையப்படுத்தியே கலந்துரையாடல் நீண்டது. தொடர்ந்தும் பழையனவற்றைப் பேசியே இருக்காமால் வி.புலிகள் நேசக்கரம் நீட்டுகிறார்கள் அதில் ஒற்றுமைப்பட வேண்டும் என்று சுடரொளி சஞ்சிகையின் ஆசிரியர் ஐரி சம்பந்தன் தெரிவித்தார். டொக்டர் பாலா, டொக்டர் நீதிராஜா, நேசன் மற்றும் சிலரும் தமது கருத்துக்களை முன் வைத்தனர்.

முஸ்லீம் என்பது மதத்தை அடையாளப்படுத்துவதாகவும் சோனகர் என்பதே தமிழ் மொழி பேசும் முஸ்லீம்களின் இனம் என்றார் நிஸ்தார் மொகமட். ச முருகையா கருத்துத் தெரிவிக்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் என்ற நான்கு பிரிவினரையும் உள்ளடக்கிய அரசியல் தீர்வே அவசியம் என்று தெரிவித்தார். மலையகத் தமிழர்களும் உள்ளடக்கப்படுவதன் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டினார். சேனன் கருத்துத் தெரிவிக்கையில் பிரித்தானிய அரசின் முஸ்லீம் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டங்களில் தமிழர்கள் யாரும் கலந்த கொள்வதில்லை என்று குற்றம்சாட்டினார். மேலும் ராஜேஸ்குமாரின் பேச்சை ஆதரித்த அவர், தமிழ் தேசியவாதத்தின் பாசிசப் போக்கு முஸ்லீம் மற்றும் சாதிய பிரிவினரை ஒடுக்குவதை சுட்டிக்காட்டினார். மேலும் இன உருவாக்கத்திற்கு மொழி அடிப்படை இல்லை என்றும் அவர் தெரிவித்தார். இதே கருத்தை வலியுறுத்திய ச வேலு தமிழகத்தில் ஒரே மொழி பேசும் தமிழர்களிடையே வெவ்வேறு சாதியப் பிரிவுடைய தலைவர்கள் ஒன்று சேர்கிறார்கள் இதன் மூலம் அம்மக்களிடையே உள்ள முரண்பாடுகள் நீக்கப்பட்டு விடுமா என்று கேள்வி எழுப்பினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இந்நிகழ்வின் இறுதியில் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றினர். அது வருமாறு:

- இரண்டு தசாப்தகால யுத்தம் தமிழ் - முஸ்லீம் உறவுகளை பாரதூரமாகப் பாதித்துள்ளது.

- இது மேலும் தொடராமல் இருக்க புரிந்துணர்வும் நல்லுறவும் ஏற்படுத்தப்படுவது அவசியம்.

- பல்வேறு சமூக, பிரதேச பிரிவுகளையும் சமத்துவமாக மதித்து, உள்வாங்கி உடனடியாக ஒரு அரசியல் தீர்வை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும்.

- இந்த அரசியல் தீர்வு நிபுணர்களின் பெரும்பான்மை குழுவினதும் விதாரனவினதும் அறிக்கைகளின் அடிப்படையில் அமைய வேண்டும்.

இத்தீர்மானம் கூட்ட இறுதியில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது அப் போது சபையில் இருந்தவர் களின் மிகப் பெரும்பான்மையினரால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒரு தமிழ் - முஸ்லீம் இனஉறவுகளை வலுப்படுத்துவதற்கு, அதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, அதை நோக்கிய நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு இச்சந்திப்போ இந்த சிறப்பு மலரோ உதவுமாக இருந்தால் அது 'தேசம்' சஞ்சிகைக்கும் அதன் வாசகர்களுக்கும் கிடைத்த வெற்றியாக அமையும் எனத் தெரிவித்தார் இந்நிகழ்வை ஏற்பாடு செய்த தேசம் சஞ்சிகையின் ஆசிரியர் த ஜெயபாலன்.

அமெரிக்கா: சனத்தொகை - 301,325,000 GDP - $ 13.2 ரிறில்லியன் இராணுவச் செலவீனம் - $ 481.4பில்லியன்

சினா: சனத்தொகை - 1,314,480,000 GDP - $ 2.7 ரிறில்லியன் இராணுவச் செலவீனம் - $ 45 பில்லியன்

உண்மைகள் உறங்குவதில்லை.

மார்ச் ௨௫ பிரித்தானியா சாம்ராஜ்யம் தனது காலனிகளில் அடிமை வியாபாரத்தை நிறுத்திய ௨௦௦வது வருட நிறைவு.

# இந்திய வான் வெளியில் குழப்பம்




அண்மைக்காலமாக இந்திய விமானத்துறை துரிதமாக அபிவிருத்தி அடைந்துவருகிறது. இதனால் உள் வாங்கப்படும் புதிய பயணிகளால் அன்றாடம் வான் பயணங்களின் போது தாம் சிக்கல்களுக்குள் உளாவதாக விமானிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் விமானியுடன் உரை யாட முற்பட்ட சில பயணிகளின் செய்கையால் விமானம் அவசர அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. சடுதியாக அதிகரித்து உள்ள இந்த விமானச் சேவைகளால் விமானப் பயணிகளும் அதிகரித்து உள்ளனர். முன்னனுபவம் அற்ற இப்பயணிகளின் அறியாமையாலும், விமானப் பயணத் துக்கான நடைமுறைகளை புரிந்து கொள்ளமுயலாததாலும் இத்தகைய குழப்பங்கள் ஏற்படுகின்றன. உள்ளுர் விமான சேவைகளிலேயே இத்தகைய குளறுபடிகள் அதிகளவில் ஏற்படுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

விமானம் பறப்பதற்கு ஆயத்தம் செய்யப்பட்டுக் கொண்டிருந்த இறுதி வேளையில் சடுதியாக ஒரு பிரயாணி தானாகக் கதவைத்திறந்து வெளியேற முற்பட்டிருக்கிறார். மற்றொரு தடவை விமானம் டில்லி விமான நிலையத்தில் விமானம் இறங்க முற்பட்ட வேளையில் கொக்பிட்டை நோக்கி வந்த ஒரு இளைஞர் குழுவினரின் நடத்தையால் விமான ஓட்டி தடுமாறி அவசர தரையிறக்கம் செய்யவேண்டி நேர்ந்துள்ளது. புகைத்தல் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் தடையை மீறிப் புகைபிடிக்க முயன்ற ஒரு அரசியல்வாதியால் விமானம் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இத்தகைய குழப்பதாரிகள் பெரும் பாலும் முதல் தடவை பறப்பவர்களா கவும், அரசியல்வாதிகளாகவும், அரச உயரதிகாரிகளாகவும் உள்ளனர்.

இந்திய விமானங்களின் அநாவசிய பயணத் தாமதங்கள், நீண்ட நேரம் பயணிகள் அங்கலாய்ப்பு, தரமான உணவு விநியோகமின்மை, பயண முகவர்களினதும், விமானத்தள அதிகாரிகளினதும் ஊழல் என்பன இந்நிலைக்குக் காரணமாகின்றன என்று பெயர்குறிப்பிட விரும்பாத ஒரு விமானக்கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

## உப்பிலாப் பண்டம் உடலுக்கு நன்று

'உப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே' இது பழமொழி. அரசாங்கத்தின் என்னும் உணவு தரப்படுத்தும் நிலையம் உப்பை குறையுங்கள் என்று உற்பத்தியாளருக்கும் பாவனையாளருக்கும் அறிவித்துள்ளது. அதிகமாக உப்பை எடுப்பதனால் உயர்குருதி அழுத்தம் (Hypertension), பாரிசவாதம் (Strok), இதய தாக்கு (Heart attack) மற்றும் குழந்தைகளுக்கு பாதிப்பு என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

### ஏன் உப்பு அவசியம்?

உப்பு சுவைக்கு அவசியம். அதை விட உடலின் மின் இரசாயண சமநிலையை இது பேணுகின்றது. மின் இரசாயண சமநிலை பாதிக்கப்படுமாயின் உடல் தொழில்கள் பல பாதிப்படையும்.

### உப்பு ஏற்படுத்தும் பாதிப்புகள் என்ன ?

உடலில் உப்பு அதிகரித்தால் உயர்குருதி அழுத்தம், இதய தாக்கு, பாரிசவாதம், உடலின் நீர் சமநிலை பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு, மூளை கலங்களின் செயற்பாடு குறைதல், உடல் தசைகளின் பலவீனம் போன்றன. குழந்தைகளின் உடல் உறுப்புக்கள் இந்த உப்பின் அளவுக்கு பழக்கப்படாததனால் அவர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படுகின்றது.

### எவ்வளவு உப்பு உட்கொள்ளலாம் ?

சராசரி மனிதன் நாள் ஒன்றுக்கு 6g உப்பை உணவில் சேர்த்துக்கொள்ளலாம். 6g என்ற சரியான அளவு உப்பை எல்லோரும் எடுப்பார்களாயின் 70,000 heart attackஐ நிறுத்தலாம் என்கிறது ஆய்வு. ஒரு முட்டையினை தனியாக அவித்து சாப்பிடும் போது எப்படி உப்புச்சுவை தெரிகிறதோ அது தான் சராசரி உப்பின் அளவு.

உணவுத் தரக் கட்டுப்பாட்டு நிலையம் தற்போது 85%மான உணவுகளில் உப்பின் அளவை குறைத்துள்ளது. உப்பு அதிகமாக பாவிப்பதனால் 30,000 பாரிசவாதக்காரர்களில் 15,000 பேர் அதிக ஆபத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். சோடியம் குளோரைட்டு, சோடியம் மொனோ குளோரைட்டு, சோடியம் இருகாபனேற்று என்பன உப்புகளில் உள்ளது. அயடீனும் காணப்படும்.

### உப்பை எவ்வாறு குறைக்கலாம் ?

அதிக பழவகை உண்ணுதல், சமையலில் ஒரு தரம் மட்டுமே உப்பை போடுதல் அல்லது உப்பை குறைத்து போடுதல், உப்பு குறைவாக உள்ள உணவுப் பொருட்களை தெரிவு செய்து உண்ணுதல் போன்றன.

## பொதுவான flu உம் தடுப்பு முறைகளும்

### Flu - காய்ச்சல்

Flu இனாலும் அதைக் குணப்படுத் தாமல் ஏற்படுகின்ற சிக்கலாலும் நூறு பேருக்கு மேல் UK யில் ஒரு வருடத்தில் இறக்க நேரிடுகின்றது. இக்காய்ச்சல் வைரசினால் ஏற்படுவதால் இதற்கு நேரடியான தடுப்புமுறைகள் இல்லை எனலாம். இருந்த போதிலும் தடுப்பூசி மூலம் பாதுகாப்பு ஒன்றினை வழங்கலாம்.

### Flu என்றால் என்ன?

பெரும்பாலானோர் தடிமனையும் காய்ச்சலையும் ஒன்றாக விளங்குகின் றார்கள். இது தவறு. இவை இரண்டுக்கும் இடையில் பல வேறுபாடுகள் உள்ளது. ஆனால் இரண்டும் வைரசினால் தான் ஏற்படுகின்றது. தடிமன் என்றால் மூக்கு அரிப்பு, தும்மல், தொண்டையில் புண், மூக்கடைப்பு, மூக்கினால் சளி வெளியேறுதல், இருமல் என்பன இருக்கும். Flu என்றால் மேற்கூறியவற்றுடன் காய்ச்சல் (101 பாகை பரனைற்றிலும் கூடின temperature), உடல் மிகவும் சூடாக இருத்தல், தசைகளில், மூட்டுக்களில் வலி போன்றன இருக்கும். இது திடீர் என மிக இலகுவில் தொற்றக் கூடியது. சாதாரணமாக இந்த Flu வந்தால் 5 - 6 நாட்கள் வரை இருக்கும். இது இருமல், தும்மல், கண், மூக்கில் இருந்து வடியும் நீரினால் மற்றவர்களுக்கு தொற்றுகின்றது.

### எவ்வாறு தடுக்கலாம் ?

தற்காலிக தடுப்பூசி போடலாம். இதை வயதானவர்கள், முட்டுநோய் (asthma) உள்ளவர்கள், உடலின் எதிர்ப்புசக்தி குறைவாக உள்ளவர்கள் போட்டுக் கொள்ளலாம்.

### இந்த Flu வந்தால் என்ன சிகிச்சை செய்யலாம் ?

பரசிற்றமோல் இனால் வலி, காய்ச்சலை குறைக்கலாம், சூடான பானங்களை அதிகம் அருந்த வேண்டும், orange, lemon போன்ற பழங்கள் சாப்பிடுவது நல்லது, புகைக்கும் பழக்கம் இருந்தால் புகைத்தலை நிறுத்த வேண்டும், ஓய்வு மிக முக்கியம், சிலர் நரம்பு தொடர்பான சிக்கல்களை தடுப்பதற்காக Aspirine பாவிப்பார்கள், குழந்தைகள் இதை பாவிக்க கூடாது.

UKயில் type A virus பாதிப்பை ஏற்படுத்துவதாக அவதானித்துள்ளார்கள். இந்த Flu வந்து அதை கவனிக்காமல் அப்படியே விட்டால் இது இரண்டாம் நிலை தொற்றை ஏற்படுத்தக் கூடும். இது மிகவும் ஆபத்தானது. எனவே Flu வந்தால் உடனே வைத்தியரை நாட வேண்டும்.

# கர்ப்பிணிகள் கடல்உணவுகளை உட்கொள்வதால் விவேகமான குழந்தைகளைப் பெறுவர்

கர்ப்பிணிகள் வாரத்தில் குறைந்தது மூன்று நாட்கள்ாவது மீன் கறியை சாப்பிடுவதால் அவர்களது குழந்தையின் மூளை வளர்ச்சி பெரிதும் அபிவிருத்தி அடைகின்றதாம். புத்திசாதுர்யமான குழந்தைகளாகவும், இயல்பான நன்நடத்தை மிக்க பிள்ளைகளாகவும் அவர்கள் வளர கர்ப்பிணித் தாய்மார் தமது உணவில் 350 கிராம் மீன் மற்றும் கடல் உணவுகளை வாராந்தம் சேர்த்துக்கொள்வது நல்லதென்று லான்செட் மருத்துவ சஞ்சிகை ஆய்வுமுடிவுகள் கூறுகின்றன.

பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தின் இந்த ஆய்வின்படி, தற்போது மருத்துவர்களால் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் ஆலோசனைகள் அவர்களை மீன் உணவிலிருந்து விலகிச்செல்லத் தூண்டுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பேராசிரியர் ஜீன் கோல்டிங் இவ்வாய்வினை வழிநடத்தியிருந்தார். அவர் மேலும் குறிப்பிடும்போது கருப்பையில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சியில் மீன் உணவுவகைகள் அதிக பங்கை வகிக்கின்றன என்றும் இந்த அடிப்படை உண்மை பல வைத்தியர்களால்



தவறாக எடுத்துச்சொல்லப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். தற்போது, மீன் உணவால் மேர்க்குரியின் (பாதரசம்) அளவு கர்ப்பிணிகளிடம் அதிகரிப்பதால் கர்ப்பத்தில் குறைபாடுகள் ஏற்படுகின்றதென மருத்துவர்கள் குறிப்பிட்டு வருகின்றார்கள்.

பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தினால் 9000 கர்ப்பிணிகள் இந்த மருத்துவ ஆய்வுக்கு முன்னர் உட்படுத்தப்பட்டு இருந்தனர். இவர்களின் குழந்தைகள் பிறந்து எட்டு வருடங்களின் பின்னர் இதே ஆய்வாளர்களால் மீண்டும் ஆய்வு செய்யப்பட்டிருந்தனர். இந்த ஆய்வின் முடிவுகள் எதிர்காலத்தில் மருத்துவத்துறையினரின் ஆலோசனையில் பல மாறுதல்களை கொண்டுவரும் என நம்பப்படுகின்றது.

36 பில்லியனெயர்கள் இந்தியாவில் உள்ளனர். ஆசியாவில் கூடிய பில்லியனெயர்களுடைய நாடாக இந்தியா திகழ்கிறது. ஜப்பான் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டு உள்ளது.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

ஒரு சராசரி பிரித்தானியர் தனது வாழ்க்கைக் காலத்தில் 16 தடவைகள் வீட்டை மாற்றிக் கொள்கிறார். பில் கேர்ஸ்க்கு ஒரு நாளைக்கு 4 மில்லியன் மின் அஞ்சல்கள் வருகிறது.

# "திரும்பிச் செல்வது தனிப்பட்டவர்களின் முடிவு"

### ஐஓஎம் அலுவலர் நிக்கலஸ் பேக்ஸ்ராண்ட் உடன் சந்திப்பு

ல.குரல்: ஐஓஎம் இனுடைய வரலாற்று பின்புலத்தை உங்களால் சுருக்கமாக விபரிக்க முடியுமா ?

நிக்கலஸ்: ஐஓஎம் 1951ல் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் ஆரம்பிக்கப்பட்டது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்காக இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் இதுவே எமது அமைப்பின் பிரதான நோக்கமாக இருந்தது. அதன் பின் நாங்கள் பெரிய அளவில் வளர்ந்துள்ளோம்.

இப்போது நாங்கள் சற்று வேறுபட்ட அமைப்பாக உள்ளோம். எங்களுக்கு நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இப்போது அலுவலகங்கள் உள்ளது. நாங்கள் அண்ணளவாக 12 மில்லியன் குடிபெயர்ந்த மக்களுக்கு கடந்த காலத்தில் உதவியிருக்கிறோம். இயற்கை அழிவுகள், யுத்தம், மனித அவலங்களினால் மக்கள் நாட்டைவிட்டு குடிபெயரும் போது நாங்கள் உதவி வருகின்றோம்.

இவ்வாறான முதலாவது நிகழ்வு 1951ல் ஹங்கேரியில் ஏற்பட்டது. இதன் போது நூறாயிரக்கணக்கான மக்கள் யுத்தத்தால் இடம்பெயர்ந்தனர். அவர்களுக்கு உதவினோம். அண்மைக் காலத்தை எடுத்துக் கொண்டால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பாகிஸ்தானில் இடம்பெற்ற பூமி அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுடானில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களை மீளக்குடியேற்றுவதிலும் அவர்களுக்கு மீள வாழ்வளிப்பதிலும் மிகத் தீவரமாகச் செயற்பட்டோம். ஐரோப்பிய எல்லைகளில் ஆட்கள் கடத்தப்படுவதற்கு எதிரான செய்பாடுகளில் இடுபட்டோம். நாங்கள் இவ்வாறு பல்வேறு தளங்களில் வேலைசெய்கிறோம். அடிப்படையில் குடிபெயர்பவர்கள் எங்கிருந்தாலும் நாங்கள் உதவுகிறோம்.

ல.குரல்: ஐஓஎம் இன் இலக்கு என்ன ?

நிக்கலஸ்: நாங்கள் திட்டமிடப்பட்ட குடிபெயர்வுகளில் நம்பிக்கை உடையவர்கள். ஒழுங்குபடுத்தப்பட்ட குடிபெயர்வு நன்மைபயக்கும். குடிவரவால் எங்கு பிரச்சினை ஏற்படுகிறதோ அங்கு சென்று அதனை தீர்ப்பதற்கான வழிவகைகளில் ஈடுபடுவதே எமது குறிக்கோள்.


ல.குரல்: அந்த குறிக்கோளை நீங்கள் அடைகின்றீர்களா ?

நிக்கலஸ்: அப்படித்தான் நினைக்கிறேன். எப்போதுமே நாங்கள் கூடுதலாகச் செய்ய முடியும். யுகே யை எடுத்துக்கொண்டால் நாங்கள் பிரதானமாக சுயவிருப்புடன் திரும்பிச் செல்பவர்களுக்கு உதவுவதற்கான திட்டத்தை வைத்துள்ளோம். ஐஓஎம் யுகேயையும் ஐஓஎம் இன்ரநசனலையும் எடுத்துக் கொண்டால் அவற்றின் செயற்பாடுகள் சற்று வித்தியாசமானவை. கடந்த காலங்களை எடுத்துக் கொண்டால் 1999களில் சில நூறு பேரே தங்கள் நாட்டுக்குத் திரும்பிச் சென்றனர். ஆனால் இப்போது சில ஆயிரம் பேர் தங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்கின்றனர். இது நாங்கள் மிகவும் வளர்ந்து வருவதையே காட்டுகிறது. தற்போது கூடுதலான மக்கள் சுயவிருப்புடன் திரும்பிச் செல்லும் திட்டத்தை அறிந்து வைத்துள்ளனர்.

ல.குரல்: ஐஓஎம் திரும்பித் தமது நாடுகளுக்குச் செல்பவர்களுக்கு எந்த வழிகளில் உதவுகிறது ?

நிக்கலஸ்: இந்நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியவர்கள், சட்ட விரோதமாக இந்நாட்டில் தங்கி உள்ளவர்கள் யாரும் சுயவிருப்புடன் திரும்பிச் செல்லும் இத்திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம். அவர்கள் அதற்கு தகுதியானவர்களாக இருந்தால் பயண ஆவணங்களை பெறுவதற்கு உதவுவதுடன் விமானத்தளத்திலும் உதவி வழங்கப்படும். அவர்கள் தம் சொந்த நாட்டுக்குத் திரும்பும் பயணச்செலவு பெற்றுக் கொடுக்கப்படும். அவர்கள் தம் நாட்டில் தரையிறங்கியதும் கொழும்பு விமானநிலையத்தில் அவர்கள் விரும்பினால் ஐஓஎம் அலுவலர்கள் அவர்களுக்கு உதவுவார்கள். அவர்களுக்கு உடலநலக் குறைவு இருந்தால் விமானத்தில் அதற்கான உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

தஞ்சம் கோரியவர்களாக இருந்தால் தற்போது நாங்கள் 3500 பவுண் பெறுமதியான உதவிகளை ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் வழங்குகிறோம். இது வழமையாக பணமாக வழங்கப்படுவதில்லை. வேறு வகைகளில் வழங்கப்படும். இதன் நோக்கம் அவர்களை பணமீட்டக் கூடிய ஒரு வழியில் ஈடுபடுத்தவது. அதாவது சிறு வியாபாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பது. தொழில் பயிற்சி அல்லது கல்வியில் ஈடுபட விரும்புபவர்களுக்கு உதவுவது. இவ்வாறான உதவிகளைப் பெற்றவர்களை எமது தகவல் தொகுப்பில் காணலாம். இது அவர்களை பெரிய செல்வந்தர்களாக்கிவிடாது. எல்லோருடைய பிரச்சினைகளையும் தீர்த்து வைக்காது. இது புதிய ஆரம்பத்திற்கான ஒரு அத்திவாரத்திற்கான கல். இது நாட்டுக்குத் திரும்பிச் சென்றவர்களுக்கு மிகவும் உதவியுள்ளது.



ல.குரல்: லண்டனிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கிட்டத்தட்ட 30,000க்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட நிலையில் உள்ளனர். இவர்கள் ஐஓஎம் இன் உதவியை பெற முடியுமா ?

நிக்கலஸ்: பாரதூரமான குற்றச் செயல்களில் ஈடுபடாதவர்கள் எல்லோருமே எமது உதவியைப் பெற முடியும். பெரும்பாலும் இவர்களின் விண்ணப்பங்கள் உள்துறை அமைச்சால் அங்கிகரிக்கப்படும். ஆம் விதிமுறைகளின் படி அவர்கள் எமது உதவியைப் பெற முடியும். தஞ்சம் நிராகரிக்கப்பட்ட அனைவரும் இத்திட்டத்தில் உதவியைப் பெற விண்ணப்பிக்கலாம். மேன் முறையீட்டுக்காக காத்திருப்பவர்கள், அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட நிலையில் இன்னமும் இந்நாட்டில் உள்ளவர்கள், தமது சட்ட செயன்முறைகள் அனைத்தையும் பயன்படுத்தி இனிமேல் எதுவும் இல்லை என்ற நிலையில் கைவிடப்பட்டவர்கள் அனைவரும் சுயவிருப்பில் திரும்பிச் செல்லும் திட்டத்திற்கு விண்ணப்பித்து குடும்ப உறுப்பினருக்கு 3500 உதவியைப் பெற முடியும்.

மேலும் இந்நாட்டுக்கு கடத்தி வரப்பட்டவர்கள், தமது விடுமுறை விசாவில் வந்து விசா காலாவதியானவர்கள், மாணவர்களுக்கான வீசாவில் வந்து அவ்வீசா காலாவதியானவர்கள் இவர்கள் சட்டவிரோத குடியெர்வாளர்கள். இவர்கள் வேறு வகையினர். நாம் இவர்களுக்கு வேறொரு உதவும் திட்டத்தை வைத்துள்ளோம். இவர்கள் 3500 பவுண் பெறுமதியதன உதவியைத் தவிர சுயவிருப்பில் திரும்பிச் செல்லும் திட்டத்தில் உள்ள அனைத்து உதவிகளையும் பெறுவார்கள்.

ல.குரல்: தடுப்பு மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் இந்த உதவியைப் பெற முடியுமா ?

நிக்கலஸ்: ஆம். குறிப்பிட்ட திகதியில் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற உத்தரவைப் பெறாதவர்கள் எல்லோரும் சுயவிருப்பில் திரும்பிச் செல்லும் திட்டத்தின் கீழ் எமது உதவியைப் பெறலாம். நாங்கள் தடுப்பு மையங்களுடன் மிகவும் நெருங்கி பணியாற்றுகின்றோம். எமது சேவைகள் பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். உண்மையில் தடுப்பு மையங்கள் இந்த தகவல்களை தடுத்து வைக்கப்பட்டு உள்ளவர்களுக்கு வழங்கும் என்ற நம்பிக்கையில் நாங்கள் அவர்களில் தங்கியுள்ளோம். எந்த சூழ்நிலையிலும் பலவந்தமாக திருப்பி அனுப்பப்படுவதிலும் சுயமாகத் திரும்பிச் செல்வது மிகவும் நல்லது என்றே நாங்கள் நம்புகிறோம்.

ல.குரல்: மொழிப் பிரச்சினை உடையவர்கள் உங்களிடம் உதவிக்கு வருவதானால் அவர்களுக்கு உதவும் வகையில் உங்களிடம் மொழிபெயர்ப்பாளர்கள் உள்ளனரா ?

நிக்கலஸ்: எங்களிடம் தமிழ் அல்லது சிங்களம் பேசக்கூடிய அலுவலர்கள் யாரும் இல்லை. அவ்வாறு மொழிப் பிரச்சினை உடையவர்கள் தமது உறவினர் நண்பர்களுடனேயே எம்மிடம் வருகின்றனர்.

ல.குரல்: இலங்கையில் யுத்தம் மீண்டும் ஏற்பட்டு உள்ளது. யாராவது இலங்கைக்கு இப்போது திரும்பிச் செல்கிறார்களா ?

நிக்கலஸ்: இது ஒரு இக்கட்டான காலகட்டம். கடினமான சூழ்நிலை. அதனை நாங்கள் முதலில் தெரியப்படுத்துகிறோம்.



தங்களுக்கு உள்ள ஆபத்தை மதிப்பிட்டே அவர்கள் திரும்புகிறார்கள். இது அவர்களுடைய சொந்த முடிவு. பலர் இப்போதும் திரும்பிச் செல்கிறார்கள். அதற்கான புள்ளிவிபரத்தை தரமுடியும்.

ல.குரல்: மேற்குநாடுகளுக்கு வர புறப்பட்ட தமிழர்கள் உலகின் பல பாகங்களிலும் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் சிலசமயம் சிறைகளில் உள்ளனர். இவர்கள் தமது நாட்டுக்குத் திரும்ப ஐஓஎம் இன்ரநசனலினால் உதவ முடியுமா ?

நிக்கலஸ்: அவர்கள் இருக்கும் நாடுகளைப் பொறுத்தது. 100க்கு மேற்பட்ட நாடுகளில் ஐஓஎம் அலுவலகங்கள் உள்ளது. அவற்றுடன் தொடர்பு கொண்டால் அவர்கள் ஐஓஎம் இன் உதவியைப் பெற முடியும். யுகேயைப் போல் நெதர்லாந்திலும் ஐஓஎம் இவ்வாறான ஒரு சுயவிருப்பில் திரும்பிச் செல்லும் திட்டத்தை வைத்துள்ளது. அவர்களும் இலங்கைக்குத் திரும்பிச் சென்று மீண்டும் தம்மை அங்குள்ள சமூகத்துடன் இணைத்துக் கொள்வதற்கான உதவிகள் செய்யப்படுகிறது.

ல.குரல்: இவற்றைவிட குறிப்பாக ஏதாவது குறிப்பிட விரும்புகிறீர்களா ?

நிக்கலஸ்: தற்போது மே 31க்குள் திரும்பிச் செல்பவர்களுக்கு 3500 பெறுமதியான உதவி வழங்கப்படுகிறது. பின் யூனில் திரும்பிச் செல்பவர்களுக்கு அது 2500 பெறுமதியான உதவியாகக் குறைக்கப்படுகிறது. அதன் பின் திரும்புபவர்களுக்கு 1000 பவுண் வரையான உதவியே கிடைக்கும் என நம்புகிறேன். ஆகவே பொதுவாக திரும்பிச் செல்வது பற்றி சிந்திப்பவர்கள் தங்களுக்கு உள்ள தெரிவுகளைப் பற்றி இப்போதே ஆராய்வது நல்லது.

சிலர் நிறைந்த எதிர்பார்ப்புகளுடன் இந்த நாட்டுக்கு வருகின்றனர். ஆனால் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட ஒருவருடைய வாழ்க்கை இங்கு மிகவும் கடினமானது. சிலருக்கு திரும்பிச் செல்வது நல்லதாக இருக்கும். சிலருக்கு திரும்பிச் செல்வது நல்லதல்ல. இது தனிப்பட்டவர்களுடைய முடிவு.

(இச்சந்திப்பு லண்டனில் உள்ள ஐஓஎம் அலுவலகத்தில் பெப்ரவரி 26, 2007ல் இடம்பெற்றது)

IOM • OIM

**கடந்த காலங்களில் ஐஓஎம் உதவி பெற்று இலங்கைக்கு திரும்பிச் சென்றவர்கள்:**


**2000 - 6, 2001 - 18, 2002 - 52, 2003 - 201, 2004 - 212, 2005 - 256, 2006 - 303**

**உண்மைகள் உறங்குவதில்லை.**

1997 முதல் பிரித்தானிய மருத்துவ சேவையில் மருத்துவ தாதிகளின் எண்ணிக்கை 17 வீதத்தால் அதிகரித்து உள்ளது. மேலாண்மை செய்பவர்களின் எண்ணிக்கை 46 வீதத்தால் அதிகரித்து உள்ளது.

# தமிழ்த் திரைப்படங்களில் பாலியல் வக்கிரப்பாடல்கள்

## சட்டத்தின் மூலம் எதிர்க்கிறார் வழக்கறிஞர்



தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களில் பாலுணர்வைத் தூண்டும் பாடல்கள் முன்னெப்போதுமில்லாத வகையில் அதிகரித்து இருப்பதாகக் குற்றஞ்சாட்டும் ஒரு வழக்கறிஞர் அது தொடர்பாக தமிழக நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுத்திருக்கிறார்.


பாடசாலை வளாகங்களிலும், தெரு முனைகளிலும் பெண்களைக் கேலிசெய்யும் வகையில் திரைப்படப்பாடல்களைப் பாடும் இளைஞர்களைக் கைதுசெய்து ஈவ் டீசிங் என்ற பெயரில் தண்டனை வழங்கும் அரசு அவர்களின் ஆயுதமான பாலியல் வன்முறைகளைத் தூண்டும் பாடல்களை எழுதும் பாடலாசிரியர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஒரு கருத்தை தமிழக வழக்கறிஞர் விஜயேந்திரன் முன்வைத்துள்ளார்.

தொழிலாளர் குடியரசு முன்னணியின் சார்பில் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர் விஜயேந்திரன் இதுபற்றி மேலும் குறிப்பிடும்போது, ஆபாசமாகப் பெண்களைக் கேலி செய்யும் வகையில் எழுதப்படும் பாடல்களால் கல்லூரி மாணவிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள் என்றும் கவிஞர் வைரமுத்து, பாடல் ஆசிரியர் பா.விஜய் ஆகியோர் தனது வழக்கின் எதிர்மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இந்தப் பட்டியல் மிகவும் நீண்டது என்றும் அவர் தெரிவித்தார்.

விறுவிறுப்பாக இத்தகைய வழக்குகள் அரசியல், விளம்பர நோக்கில் தாக்கல் செய்யப்படுவதும், பின்னர் சூடாறிப்போனதும் அவை வாபஸ் பெறப்படுவதும் வழமை என சென்னைப் பல்கலைக்கழக மாணவியொருவர் கருத்துத் தெரிவித்திருந்தார். சமூக விழிப்புணர்வூட்டும் வகையிலும், அறிவுபூர்வமாகவும் தென்னிந்தியத் திரைப்படங்கள் அமைவதில்லை என்றும், இப்படங்களுக்கான திரைப்பட அனுமதியை வழங்கும் தணிக்கைக் குழுவினர் இதுபற்றி அலட்டிக்கொள்ளாதது கவலை தருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# லண்டன் நாடக முன்னோடி தாசீசியசுக்கு கனடிய இயல் விருது

2006ம் ஆண்டுக்கான இயல்விருது ஈழத்து நவீன நாடக முன்னோடிகளில் ஒருவரான ஏ.சி.தாசீசியசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சுந்தர ராமசாமி, பத்மநாப ஐயர், வெங்கட் சாமிநாதன், ஜார்ஜ் எல் ஹார்ட் போன்றோரைத் தொடர்ந்து இவ்விருதுக்குரியவராய்த் தேர்வு செய்யப்பட்டிருக்கும் தாசீசியஸ் ஈழத்தின் நவீன நாடக உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர். இயக்குனராகவும் நடிகராகவும் ஈழத்தின் நவீன நாடக உலகுக்கு அவர் ஆற்றியுள்ள பணியை கௌரவிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்படுவதாக விருது வழங்கும் கனடிய தமிழ் இலக்கிய தோட்டத்திற்கான தேர்வுக்குழு அறிவித்திருக்கிறது.



விருதுபெற்ற நாடக முன்னோடி ஏ சி தாசீசியஸ்

தற்போது லண்டனில் வசிக்கும் தாசீசியஸ் மேற்கத்திய நாடக நுட்பங்களையும் தமிழ் மரபுக் கலைகளையும் இணைத்துப் புதிய போக்கை உண்டாக்கியவர் எனப் புகழ்கிறது அக்குழு. தொடக்கத்தில் ஆங்கில நாடகங்களின் மேற்கத்திய நுட்பங்களைப் பயின்ற அவர் பின்பு ஈழத்தின் கிராமங்களுக்குள் நீண்ட பயணங்களை மேற்கொண்டு ஈழத்து தமிழ் மரபுகளை உள்வாங்கி ஒரு புதிய நவீனமான நாடக மரபைத் தோற்றுவித்தார். *பிச்சை வேண்டாம், பொறுத்தது போதும், கோடை, புதியதொரு வீடு, எந்தையும் தாயும், ஸ்ரீ சலாமி* போன்ற அவருடைய நாடகங்கள் விமர்சகர்களின் பாராட்டுக்களைப் பெற்றவை.

லண்டனில் பி.பி.சியில் 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்துவரும் தாசீசியஸ் இயக்குனராகவும் நடிகராகவும் தனது நாடக ஆக்கங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். அவருடைய ஸ்ரீ சலாமி எனும் நாடகம் ஆங்கிலம், ஜேர்மன், தமிழ் ஆகிய 3 மொழிகளையும் ஒருங்கிணைத்த ஒன்று. இது சுவிஸில் 36 முறை அரங்கேறியிருக்கிறது. கனடாவுக்கும் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நாடகப் பயிற்சி அளித்துள்ள தாசீசியஸ் பல முறை அதற்காகவே தமிழகத்திற்கும் வந்துள்ளார். சுவிற்சலாந்து அரசு தனது 700 வது ஆண்டுவிழாவைக் கொண்டாட நினைத்த பொழுது அதன் கலாச்சார நிகழ்வுகளுக்கான ஆலோசகராகவும் பயிற்சியாளராகவும் அவரைத் தேர்வு செய்தது.


விருது வழங்கும் விழா வரும் ஜூன் மாதத்தில் ரொரன்டோ பல்கலைக்கழகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. நன்றி: காலச்சுவடு

## "மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசு பதிலளிக்க வேண்டும்" சர்வதேச மன்னிப்புச் சபை

இலங்கையில் கடத்தல்கள் படுகொலைகள் தடுத்து வைத்தல் மனித உரிமை மீறல்கள் போன்றன தொடர்பாக மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க மார்ச் நடுப்பகுதியில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகளின் சபையின் மனித உரிமைகள் சபையில் பதிலளிக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளதுடன் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. கடந்த ஆண்டு இவை தொடர்பாக 1000 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளதுடன் நாடு முழுவதும் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமலும் போயுள்ளனர். இலங்கையில் இது தொடர்பாக 5749 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

# சயனைட்: ராஜீவ் காந்தி கொலைச்சம்பவம் படமாகின்றது

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையாளிகளான சிவராசன் சுபா மற்றும் அவருடன் இறுதிநேரத் தொடர்பு கொண்டிருந்தவர்களின் நடமாட்டத்தைச் சித்தரிப்பதான 'சயனைட்' என்னும் புதிய தமிழ்ப் படம் விரைவில் வெளியிடப்படவுள்ளது. கன்னடத்தில் இயக்குநர் ரமேஷ் மூலம் இயக்கப்பட்ட இப்படம் பின்னர் தமிழிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.



ராஜீவ் கொல்லப்பட்ட வேளையில் சென்னை திரைப்படக் கல்லூரி மாணவராக இருந்த ரமேஷ் இந்த நிகழ்வுகளின் பின்னணியை நேரில் தரிசித்தவர். இதனால் வெகுவாக ஈர்க்கப்பட்டவர். ராஜீவ் கொலை பற்றிப் பல ஆய்வுகளில் ஈடுபட்டவர். கொலையாளிகளுக்குப் புகலிடம் தந்ததாகக் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்ட ரங்கநாதன், இயக்குநர் ரமேஷின் வேண்டப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ராஜீவ்காந்தியின் கொலையைப் படைப்புலமாக்கிகொண்ட 'குற்றப்பத்திரிகை' தமிழ்ப் படம் தமிழக இயக்குநர் செல்வமணியினால் ராஜீவ்காந்தி கொலையுண்ட சில மாதங்களிலேயே அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்டது. இது அரசியல் மற்றும் தணிக்கைக் குழுவினரின் இழுபறிகளாலும், நீதிமன்றத் தடையுத்தரவுகளாலும் இன்றுவரை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் கன்னடத்தில் கவனமாகத் தயாரிக்கப்பட்ட 'சயனைட்' யூ சான்றிதழுடன் திரையிடப்பட்டு கன்னடத்தில் பெரும் பரபரப்பை தற்போது ஏற்படுத்தி வருகின்றது. மத்திய சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த கார்த்திகேயனின் பாத்திரத்தை நடிகர் நாசர் ஏற்று இயல்பாக நடித்திருக்கிறார். இதுபற்றி நாசர் குறிப்பிடுகையில் எந்தவொரு தனிநபரையோ அரசையோ விடுதலை இயக்கத்தையோ குற்றம்சாட்டுவதாக அமையவில்லை என்றார்.

# இந்தியாவில் உள்ள Call Centre யை Loyds TSB மூடியது

வாடிக்கையாளர்களும் மறுமுனையில் உள்ள Call Centre பணியாளர்களும் ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்ள முடியாததைத் தொடர்ந்து வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகள் அதிகரித்ததது. அதனைத் தொடர்ந்தே மும்பாயில் உள்ள Call Centre யை Loyds TSB மூடுவதென்ற முடிவுக்கு வந்தது. நியூகாஸ்டில் பகுதியில் இருந்த Call Centre யை மூடிவிட்டு 2004ல் மும்பாயில் Call Centre யை Loyds TSB திறந்தது. தற்போது Call Centre யை பிரித்தானியாவில் இயக்க நூற்றுக்கணக்கான புதியவர்களை ஆட்சேர்க்கின்றது.

# இலங்கையில் இருந்து ஒரு தமிழ் இலக்கியத்தளம்

இலங்கையின் முதலாவது தமிழ் கலை இலக்கிய இணையச் சஞ்சிகை சிறகு. கொம் என்ற இணையச்சஞ்சிகை எளசையபர. உழஅ அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. இருமாத இதழாக வெளிவரும் இவ்விணையச் சஞ்சிகை தேசிய மற்றும் மலையகம் சார்ந்த இலங்கையின் ஒரே இலக்கிய இணையத் தளமாகக் கருதப்படுகின்றது. கண்டி, கெண்கல்ல பகுதியிலிருந்து ரா.நித்தியானந்தனை ஆசிரியராகக் கொண்டு இச்சஞ்சிகை இரு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ரா.நித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். தற்போது கண்டி திருத்துவக் கல்லூரியில் பணியாற்றுகின்றார். இவ்விணையத்தளத்திற்கு ஆக்கங்களை அனுப்பிவைக்க விரும்புவோர் நளைவழச;ளசையபர.உழஅ என்ற மின்னஞ்சலுக்கு படைப்புகளை அனுப்பி வைக்கலாம்.

23,000 யானைகள் அவற்றின் ஐவரித் தந்தங்களுக்காக சட்ட விரோதமாகக் கொல்லப்படுகிறது. 233 தொன் ஐவரித் தந்தங்கள் கடந்த ஆண்டு சட்டவிரோதமாக சந்தைப்படுத்தப்பட்டு உள்ளது.

**உண்மைகள் உறங்குவதில்லை.**

# நீங்கள் உங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதைப் பற்றி எண்ணுகிறீர்களா ? எங்களுடன் பேசுங்கள்.

# எங்களால் உங்களுக்கு உதவ முடியும்.

- ☐ நாங்கள் உங்கள் விமானச் சீட்டைப் பெற்றுத் தருவோம்
- ☐ நாங்கள் உங்களுக்கு இங்கும் அங்கும் ஏற்படும் உள்நாட்டு பயணச் செலவை வழங்குவோம்
- ☐ நாங்கள் உங்களுக்கு வேண்டிய பயண ஆவணங்களைப் பெற்றுத்தர உதவுவோம்
- ☐ நாங்கள் உங்களை வழியனுப்பி வைப்பதிலும் வரவேற்பதிலும் உதவுவோம்

## தஞ்சம்கோரியோர்

யு.கே இல் இருந்து உங்கள் நாட்டிற்கு சுயவிருப்பில் திரும்பிச் செல்வதற்கு

## 31 மே 2007


திகதிக்கு முன் விண்ணப்பித்தால்

# £3500

பெறுமதியான மீள்இணைவு உதவியை திரும்பும் ஒவ்வொருவரும் பெறமுடியும்.

முக்கிய குறிப்பு : யூன் 2007ல் விண்ணப்பித்தால் இந்த உதவித் தொகை £2500 ஆக குறைக்கப்படும். யூன் 2007க்கு பின் வரை காத்திருந்து விண்ணப்பித்தால் உங்களுக்கு வழமையான ஒருவருக்கு £1000 பெறுமாதியான மீள்இணைவு உதவி மட்டுமே கிடைக்கும்.

மேலதிக விபரங்களுக்கு ஐ ஓ எம் இன் இலவச தொலைபேசி இலக்கத்திற்கு அழையுங்கள் 0800 783 2332



ஐ ஓ எம் ஒரு சுயாதீன சர்வதேச அமைப்பு. இது பிரித்தானிய அரசின் ஒரு பிரிவல்ல.
நீங்கள் விரும்பினால் மட்டுமே, நீங்கள் உங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல நாங்கள் உதவுவோம்.

IOM International Orgnization for Migration
0800 783 2332 - www.iomlondon.org

This programme is co-funded by the European Refugee Fund

21 Westminister Palace Gardens
Artillery Row, London SW1P 1RR
Tel: 020 7233 0001
Fax: 020 7233 3001
www.iomlondon.org